21st December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not aware of these demands made by the Non-gazetted Officers. I do not see how this question arises. The immediate question concerning everybody is the question of the dearness allowance and the pay structure. I do not think we should confuse the main issue by bringing in the minor issues.

SRI M. KALYANASUNDARAM : கடந்த கூட்டத்தில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தபோது "கிராம உத்தியோகஸ்தர்களுடைய கோரிக்கைகள் என்ன ஆயிற்று," என்று கேட்டோம். அப்போது "அவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதுசம்பந்தமாக மந்திரி சபை ஒரு சப்-கமிட்டி போட்டிருக்கிறது" என்றார்கள். அந்தக் கமிட்டியின் யோசனைப் பிரகாரம்தான் இப்பொழுது அவர்களுக்குச் சில சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா? அவர்களுக்குக் காட்டவேண்டிய சலுகை முடிந்துவிட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நாங்கள் கொடுத்திருப்பது தற்காலிமாகக் கொடுத்திருக்கக்கூடிய நிவாரணம் தான். நான் என்னுடைய உரையில் கூறியிருக்கிற பிரகாரம் மற்ற கோரிக்கைகள் எல்லாம் சர்க்காருடைய ஆலோசனையில் இருந்து வருகிறது.

Accommodation in the Central Jail, Madras

* 388 Q.—SRI N. K. PALANISAMY (on behalf of Sri S. Pakkiriswami Pillai) : Will the Hon. the Minister for Finance be pleaesd to state— **9-10 a.m.**

(a) the total number of prisoners to be kept in the Madras Penitentiary; and

(b) the present strength?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The accommodation in the Central Jail, Madras, is for 1,457 prisoners.

(b) The lock-up in the jail on 24th November 1956 was 2,235.

SRI N. K. PALANISAMY : May I know, Sir, whether there is any proposal to shift the penitentiary to some other place?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. A proposal is under consideration whether it would be feasible to shift the penitentiary to a place outside the City limits or anywhere else. But it is rather a difficult question to take a decision on. But this proposal is under the consideration of the Government.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் சொல்லும் பதிலிலிருந்து சிறையில் பற்ருக்குறை ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. இதை நிவர்த்திப்பதற்கு இதை ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து இப்பொழுது இருக்கும் குறைகளை நீக்குவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்காகத்தான் முதல் ஐந்தாண்டு திட்டமும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் இருக்கின்றன, இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவையாக இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — ALONE TRIUMPHS

[21st December 1956

SRI M. PALANIYANDI : முன்பு சிறை மந்திரி அவர்கள் சிறை மான்யத்தைப்பற்றி பேசும்போது சிறையிலுள்ள கஷ்டங்களைப்பற்றி அவருடைய அனுபவத்தை எடுத்துச்சொன்னார். அதன்பிறகு ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்பு இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை எல்லோரும் உணர்வார்கள். முன்பு சிறை அனுபவம் இருந்தால் அவர்கள் இப்பொழுது நன்றாக உணர்வார்கள்.

SRI S. PANCHAKSHARAM CHETTIAR : A few months ago there was transfer of prisoners from the Madras Penitentiary to Vellore Jail and vice versa. Was it due to reasons of congestion or due to other reasons?

THE HON. SRI C. SUBRAMANIAM : There was over-population here in this jail and there was vacant space available in the Vellore Jail. That is why these transfers were made.

SRI S. R. ARUMUGAM : சென்னை சிறையில் இருக்கக்கூடிய கைதிகள் எந்த மாதிரியான குற்றங்கள் அதிகமாக செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றிய புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : தண்டனை அனுபவிக்கும் கைதிகள், ஓரளவு நல்லொழுக்கத்துடன் நடந்துகொண்டால், அவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நல்லொழுக்கத்துடன் இருப்பவர்களானால் தாராளமாக விடுதலை செய்துவருகிறார்கள். பல கைதிகளை இம்மாதிரியாக விடுதலை செய்திருக்கிறார்கள்.

SRI S. RAMALINGAM : சிறைக் கைதிகளில் நல்லபடி நடந்து கொள்ளுகிறவர்களை அபிவிருத்தி வேலைகளில் உபயோகப்படுத்தி அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பரீட்சார்த்தமாக சில அபிவிருத்தி வேலைகள் நடந்துவருகின்றன. அவைகள் வெற்றிகரமாக இருக்குமானால் அதை விஸ்தரிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

SRI K. V. RAMASWAMY : சிறையிலிருக்கும் குற்றவாளிகளைத் திருத்தி நல்வழிப்படுத்த சிறந்த சினிமாப்படங்களை, ஐந்தாண்டு திட்டத்தை விளக்கும் வகையில், காண்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. C. SUBRAMANIAM : மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

SRI A. RATNAM : சிறைபார்வையாளர் குழுவில் ஒருவரான ஸ்ரீ நடேசன், எம். பி. செத்துப் போய் பல நாள் ஆகியும் இப்பொழுது இருக்கும் சர்க்கார் ஜாபிதாவில் அவர் பெயர் இருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. C. SUBRAMANIAM : இறந்துபோனவரின் பெயர் ஜாபிதாவில் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது.

21st December 1956]

Sri M. PALANIYANDI : கோயம்பத்தூரில் இருக்கக்கூடிய கைதிகள் சாமான்களை மிகவும் நன்றாகவும் நுணுக்கமாகவும் செய்து வருகிறார்கள். அப்படி இருந்தும் அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது.

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Footwear unit and match factory at Perambur

* 389 *Q.*—Sri M. PALANIYANDI (on behalf of Sri S. Pakkiriswami Pillai) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of workers given employment in the manufacture of (1) footwear and other leather goods and (2) matches in the Cottage industries opened at Perambur, Madras ;

(*b*) the average daily earning of a worker in such works; and

(*c*) the qualifications fixed for recruitment to the said works?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 33 persons have been employed in the Footwear Unit and 210 persons in the Match Factory.

(*b*) Of the thirty-three persons employed in the Footwear Unit, twenty trainees are paid a stipend of Rs. 25 per mensem each. Machine Operators are paid a salary of Rs. 60 per mensem plus dearness allowance each. Nine skilled cobblers are paid Rs. 3 each per day. In the Match Factory, the average earning of a worker ranges from 8 annas to Re. 1 depending upon the outturn of work.

(*c*) No specific qualifications have been prescribed for the recruitment of workers to the Footwear Unit and Match Factory. Employees in the Footwear Unit are selected by the German Footwear Expert after a practical test. As regards Match Factory, such of those persons who are very poor and whose residence is within a radius of three furlongs from the factory are selected.

Sri S. DAIVASIGAMONEY : I can say from personal experience that the quality and the appearance of the footwear manufactured by this co-operative society is very good. May I request the Hon. Minister to expand this co-operative society?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, this is not a co-operative society. This is a unit established by the Government for affording training facilities to the footwear workers and of course Government have proposals to expand this unit which is quite popular.

Sri M. KALYANASUNDARAM : இந்தத் தீக்குச்சி தொழிற்சாலைகளிலே மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கிறார்கள் அதாவது 8 அணா, 10 அணாதான் கொடுக்கிறார்கள். அதனால் இந்தத் தொழில்களை கூட்டுறவு முறையில் நடத்தினால் அதிகமான லாபம் கிடைக்கும். அப்பொழுது அதிகமான சம்பளமும் கொடுக்கலாம். ஆகவே இவைகளை கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?